**07.12.2022**

**அ.வ.எண். 274/2012**

**வா.சா.1 பாஸ்கர் அவர்களின் குறுக்கு விசாரணை**

வழக்கு விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 18/1பி4 என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 33 செண்டு என்றால் சரிதான். தாவா சொத்து மதுராந்தகம் வட்டம், மாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்து முனுசாமி என்கின்ற செல்லமுத்துவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

தாவா சொத்தின் பழைய பட்டா எண் 185 என்று எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்து முனுசாமி என்கின்ற செல்லமுத்துவிற்கு பாத்தியப்பட்டது என்று காண்பிப்பதற்கும் பட்டா எண் 185 முனுசாமி என்கின்ற செல்லமுத்து பெயரிலுள்ளது என்பதை காண்பிப்பதற்கும் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பழைய பட்டாவையும், வரிரசீதையும் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் பட்டா பாஸ்புத்தகம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

முனுசாமி என்கின்ற செல்லமுத்து வாழ்ந்தது மற்றும் இறந்தது சென்னையிலுள்ள சேலையூர் கிராமத்தில் என்றால் எனக்கு தெரியாது. முனுசாமி என்கின்ற செல்லமுத்து மாத்தூர் கிராமத்தில் வசித்ததில்லை என்றால் எனக்கு தெரியாது. முனுசாமி என்கின்ற செல்லமுத்துவின் இறப்பு சான்றிதழின் படி அவர் வாழ்ந்து இறந்தது சென்னையிலுள்ள சேலையூர் கிராமத்தில் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தினை நான் வழக்குடன் தாக்கல் செய்த 14ம் ஆவணம் ஊர்ஜிதம் செய்கிறது என்றால் எனக்கு கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்தேன், ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது.

முனுசாமி என்கின்ற செல்லமுத்து 1965ம் ஆண்டு இறந்துவிட்டார் என்று எனது வழக்கில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முனுசாமி என்கின்ற செல்லமுத்துவிற்கு ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து என்ற ஒரு வாரிசு உள்ளார் என்று எனது வழக்கில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து சென்னையிலுள்ள சேலையூர் கிராமத்தில் வாழந்து இறந்தார் என்றால் சரிதான். ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து 1985ம் வருடம் இறந்துவிட்டார் என்று எனது வழக்கில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்துவிற்கு சாமிதாஸ் என்ற ஒரேயொரு வாரிசு என்றால் சரிதான். மேற்படி சாமிதாஸ் 1988ம் வருடம் இறந்துவிட்டதாக எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சாமிதாஸ் சென்னையிலுள்ள சேலையூரில் வசித்து வந்தார் என்றால் அவர் வால்பாறையில் வசித்தார். சாமிதாஸின் மனைவி பெயர் அன்னமுத்து அம்மாள் என்றால் சரிதான். அவர்களுக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் ரவிச்சந்திரன் மற்றும் செல்வக்குமார் என்றால் சரிதான்.

அன்னமுத்து அம்மாள் மற்றும் அவரது இரண்டு மகன்களும் எனது கிரையதாரர்கள் என்றால் சரிதான். 1965ம் வருடம் முனுசாமி என்கின்ற செல்லமுத்து இறக்கின்ற வரை அவர் பெயரிலோ அல்லது அதற்கு பின்பு 1985ம் வருடம் ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து இறக்கின்றவரை அவர் பெயரிலோ தாவா சொத்திற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பழைய பட்டா மற்றும் வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ.4 ல் எனது கிரையதாரரான அன்னமுத்து அம்மாள் என்பவருக்கு வசிப்பிடம் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் எனது 2ம் கிரையதாரான ரவிச்சந்திரன் என்பவருக்கு

வசிப்பிடம் சென்னை, தாம்பரம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் எனது 3ம் கிரையதாரான செல்வக்குமார் என்பவருக்கு வசிப்பிடம் சென்னை, வீரபாண்டி நகர் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எனது மூன்று கிரையதாரர்களுக்கும் வசிப்பிடம் தாவா கிராமம் இல்லை என்றால் சரிதான்.

சாமிதாஸின் தகப்பனார் ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்துவின் பதிவு செய்யப்பட்ட பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5ன் படி ஞானக்கண்ணு என்பவர் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் மத்தேயு மகன் ஞானக்கண்ணு என்பவர் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார். பிரதிவாதியின் கிரையதாரரான ஞானக்கண்ணுவிற்கு தான் ஆதியில் தாவா சொத்திற்கான பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

எனது கிரையதாரரின் முன்னோர்களான ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து என்பவருக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கிரையதாரரின் முன்னோர்களான முனுசாமி என்கின்ற செல்லமுத்து, ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து மற்றும் சாமிதாஸ் ஆகியோர்கள் தாவா கிராமத்தில் வசித்திருந்தால் தான் அவர்கள் பெயரில் பட்டா வழங்கியிருப்பார்கள் என்றாலும்

மேற்படி நபர்கள் யாரும் தாவா கிராமத்தில் வசித்ததில்லை என்றாலும் சரியல்ல.

தாவா கிராமத்தில் வசித்த மத்தேயு மகன் ஞானக்கண்ணு என்பவரின் பெயரை பயன்படுத்தி எனது கிரையதாரர்கள் ஆள்மாறாட்டம் செய்து எனக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது கிரையதாரர்களும் அவரது முன்னோர்களும் தாவா கிராமத்தில் வசித்ததில்லை என்றால் சரியல்ல. ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்துவின் வாரிசுகள் ஞானக்கண்ணு என்ற பெயரை வைத்து பொய்யாக பட்டா மாற்றி எனக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

185 மற்றும் 139 எண் கொண்ட இரண்டு பட்டாக்களில் மத்தேயு மகன் ஞானக்கண்ணுவிற்கு வழங்கப்பட்டது என்றாலும் ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்துவிற்கு வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. எனது கிரையதாரர்கள் மற்றும் அவரது முன்னோர்கள் தாவா சொத்தினை அனுபவித்து வந்தார்கள் என்று காண்பிப்பதற்கு அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

மத்தேயு மகன் ஞானக்கண்ணுவிற்கு வழங்கப்பட்ட பட்டாவில் அவரது தகப்பனார் பெயர் விடுபட்டிருந்ததை பயன்படுத்தி எனது கிரையதாரர்கள் தவறாக

பட்டா மாற்றம் செய்து எனக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கான பட்டா தற்போது அன்னமுத்து அம்மாள், ரவிச்சந்திரன் மற்றும் செல்வக்குமார் பெயரிலுள்ளது. எனது பெயரில் ஏன் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் நான் இந்த வழக்கை தொடர்ந்ததால் பட்டா பெயர் மாற்றம் செய்யவில்லை. மத்தேயு மகன் ஞானக்கண்ணு இறந்தபிறகு ஞானக்கண்ணுவின் மகன் தாவீது அவரது தகப்பனார் பெயரிலுள்ள பட்டா தவறாக அன்னமுத்து அம்மாள் பெயரில் வருகிறது என்று அதனை ரத்து செய்யக்கோரி வருவாய் அலுவலகத்தில் கொடுத்த மனுவிற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட தகவலில் தாவா சொத்திற்கான பட்டா 3.1.2013 தேதி வரை ஞானக்கண்ணு பெயரிலுள்ளது என்று தகவல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

ஞானக்கண்ணு என்று தான் உள்ளது என்றாலும் ஞானமுத்து என்று அதில் இல்லை என்றாலும் சரிதான். பட்டா எண் 139 எந்தக்காலத்திலும் ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து பெயரில் தாக்கலாகவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 8 ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணமாவது ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து பெயரில் உள்ளதா என்றால் இல்லை.

ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து மகன் சாமிதாஸ் பெயரிலுள்ள

பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் அந்த பட்டாவின் நகலை நான் தாக்கல் செய்துள்ளேன். சாமிதாஸ் பெயரிலுள்ள பட்டா எண் எனக்கு ஞாபகம் இல்லை. சாமிதாஸ் பெயரிலுள்ள பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.4ல் எனது கிரையதாரர்களுக்கு பூர்வீகமாக கிடைக்கப்பெற்று அவர்கள் பெயரில் பட்டா எண் 139 ஆக தாக்கலாகியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனது கிரையதாரர்களின் முன்னோரான சாமிதாஸ் கிரையம் பெற்று அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகளான எனது கிரையதாரர்களின் பெயரில் பட்டா மாறியுள்ளது என்று எந்த வாசகமும் வா.சா.ஆ.4ல் இல்லை என்றால் சரிதான்.

2009ம் வருடம் நான் கிரையம் வாங்கும் போது எனது கிரையதாரர்களின் பெயரில் பட்டா எண் 139 தாக்கலாகியிருந்தது என்று காண்பிப்பதற்கு ஆவணம் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவின் நகலை நான் தாக்கல் செய்துள்ளேன். வருவாய் ஆவணங்களை பராமரிக்கும் வருவாய் துறையினர் 2013ம் வருடம் வரை தாவா சொத்திற்கான பட்டா ஞானக்கண்ணு பெயரிலுள்ளது என்று தகவல் கொடுத்ததால் 2009ம் வருடம் எனது கிரையதாரர்களின் பெயரில் பட்டா எண் 139 தாக்கலாகியிருந்தது என்று நான்

சொல்வது பொய் என்றால் சரியல்ல.

தாவா சொத்தினை கிரையம் வாங்கிய பிறகு நான் அவ்வப்போது அங்கு சென்று பார்வையிடுவேன். நான் சென்னை, நெற்குன்றம், திருமால் நகரில் குடியிருக்கின்றேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு நான் பூந்தமல்லியில், கரையான் சாவடியில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து யார் அனுபவத்திலுள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது.

தாவா சொத்தின் ஐக்குபந்தி, கிழக்கு பக்கம் ரோடு, வடக்கு பக்கம் என்னுடைய நிலமான சர்வே எண் 15/1பி3, தெற்கு பக்கம் சுடுகாடு, மேற்கு பக்கம் ஏரி உள்ளது. நான் சொல்கின்ற மேற்படி ஐக்குபந்தி தவறு என்றாலும் நான் தாவா சொத்திற்கு சென்றதே இல்லை என்றாலும் அதை நான் அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நானோ அல்லது எனது கிரையதாரர்களோ அல்லது அவரது முன்னோர்களான சாமிதாஸ் மற்றும் ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து ஆகியோர்கள் தாவா சொத்திற்கு சென்றதே இல்லை என்றாலும் அதை அவர்கள் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

தாவா சொத்திற்கான அரசாங்கம் அளித்த பிரதவாதியின் கிரையதாரரான மத்சேயு மகன் ஞானக்கண்ணு பெயரிலுள்ள அசல் பட்டா தற்போது

பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான தாவா சொத்தினை அந்த கிராமத்தில் வசிக்கும் நபர்களுக்கு தான் அரசு வழங்கும் என்றாலும் நான் சொல்வது போல் எனது கிரையதாரர்களும், அவரது முன்னோர்களும் எந்த காலத்திலும் தாவா கிராமத்தில் வசித்ததில்லை என்றாலும் சரியல்ல.

உண்மையிலேயே ஞானக்கண்ணு என்கின்ற ஞானமுத்து பெயரில் அரசு பட்டா வழங்கியிருந்தால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் ஞானக்கண்ணு பெயரில் வழங்கப்பட்ட பட்டா பிரதிவாதியிடம் இருப்பதால் தான் அதை என்னால் தாக்கல் செய்யமுடியவில்லை என்றாலும் சரியல்ல. தாவா கிராமத்தில் வசிக்கும் மத்தேயு மகன் ஞானக்கண்ணுவிற்கு வழங்கப்பட்ட பட்டாவில் அவரது தகப்பனார் பெயர் குறிப்பிடாததை வைத்துக்கொண்டு கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் வசிக்கும் எனது கிரையதாரர்கள் அந்த பட்டா அவரது தகப்பனாருக்கு வழங்கப்பட்டது எனக்கூறி ஆள்மாறாட்டம் செய்து பொய்யான பட்டாவின் அடிப்படையில் எனக்கு கிரையம் செய்துக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

ஆள்மாறாட்டம் செய்து எந்த தொடர்புமில்லாமல் எனக்கு எழுதிக்கொடுத்த

வா.சா.ஆ.4 செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது கிரையதாரர்களிடம் தான் பரிகாரம் கோரமுடியும் என்றாலும் உண்மையான உரிமையாளர்களிடமிருந்து கிரையம் வாங்கிய பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த வழக்கும் தொடரமுடியாது என்றாலும் சரியல்ல. தாவா கிராமத்தில் வசித்து வந்த மத்தேயு மகன் ஞானக்கண்ணு பெயரில் தாக்கலாகியுள்ள பட்டா வைத்து அவர் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.5 செல்லதக்க ஆவணம் என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் உண்மையான உரிமையாளரான ஞானக்கண்ணு மகன் ஆட்சேபணை தெரிவித்ததால் தான் இதுநாள் வரை என் பெயரில் பட்டா மாற்றம் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.4 முன்னிலைக்கு நான் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.4 செல்லதக்கதல்ல என்று அறிவிக்கக்கோரும் பிரதிவாதியின் எதிரிடை கோரிக்கை அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும், உரிமை மூலமும் இல்லை என்றால் சரியல்ல.